338
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
27 MAR 2019
சென்னை - 600 028

GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திரு.ப.சிவதாணு – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் – பணி வரன்முறை – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## வணிகவரி மற்றும் பதிவுத் (எம்2) துறை

அரசாணை (2டி) எண்.19

நாள் 26.03.2019
விளம்பி, பங்குனி–12,
திருவள்ளுவர் ஆண்டு–2050.

படிக்கப்பட்டவை:

1. பதிவுத்துறைத் தலைவரின் நடவடிக்கைகள் எண்.35803/கே2/2015, நாள் 06.11.2017
2. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண்.35803/கே2/2015, நாள் 28.03.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

******

**ஆணை:-**

பதிவுத்துறையில், கன்னியாகுமரி பதிவு மாவட்டத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்தினிடையே 25.11.2013 அன்று காலமான திரு.சி.பத்மநாபபிள்ளை என்பவரின் மனைவி திருமதி.ப.ராஜேஸ்வரி என்ற கிருஷ்ணம்மாள் தமது மகன் திரு.ப.சிவதாணு என்பவருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 08.12.2015–இல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி அன்னாரது கோரிக்கையினை பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், திரு.ப.சிவதாணு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே முதலாவதாக படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார். அதன்படி, திரு.ப.சிவதாணு, 09.11.2017–ஆம் நாள் முற்பகலில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.ப.சிவதாணு, இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப் படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. பதிவுத்துறைத் தலைவரின் செயற்குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ப.சிவதாணு என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 09.11.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என கருதப்படுகிறது.

3. தற்போது பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 01.08.2018 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.100–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் நேர்வில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. அவ்வாணைக்கிணங்க, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பதிவுத்துறையில் கன்னியாகுமரி பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.ப.சிவதாணு, தேவையான உடல் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அவர் பணியில் சேர்ந்த நாளான 09.11.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் அவரது பணியை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், நடைமுறையிலுள்ள விதிகளின்படி அவற்றைப் பெற்றிடத் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண். 3159/ட்டி1/2019–1, நாள் 25.02.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.6884/ஜி2/2019, நாள் 06.03.2019-ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.பாலச்சந்திரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
~~பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28 (இணைப்புகளுடன்)~~
திரு.ப.சிவதாணு, இளநிலை உதவியாளர்,
கன்னியாகுமரி பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர் மூலமாக)

**நகல்:**
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (ட்டி1)த் துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்த(ஜி2)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

26/3/2019
பிரிவு அலுவலர்.